**தலைப்பு 326 – சமுதாயம்சார் சீர்திருத்த திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2016 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 326 – சமுதாயம்சார் சீர்திருத்த திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2017 ஆகஸ்ட் 23 ஆந் திகதி திணைக்களத்தின் ஆணையாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும், பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 2 கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 265.80 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 259.40 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 6.40 மில்லியன் அதாவது 2.41 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதியேற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 252.75 | 249.65 | 3.10 | 1.22 |
| மூலதனம் | 13.05 | 9.75 | 3.30 | 25.28 |
| மொத்தம் | 265.80 | 259.40 | 6.40 | 2.41 |

### 2.2 முற்பணக் கணக்கு

#### 2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 32601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
| --- | --- | --- | --- | --- | --- |
| ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 12.00 | 8.88 | 4.00 | 7.13 | 40.00 | 23.90 |

## 2.3 கட்டுநிதிக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள 7002/0000/00/0412/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 19,116 ஆக இருந்தது.

## 2.4 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழுள்ள பொது வைப்புக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 131,150 ஆக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வைப்புக் கணக்குகளின் இலக்கம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
| --- | --- |
| | ரூபா |
| 6000/0000/00/0013/0145/000 | 250 |
| 6000/0000/00/0018/0126/000 | 38,000 |
| 6000/0000/00/0019/0029/000 | 92,900 |
| | 131,150 |

## 2.5 கணக்காய்வு அவதானிப்பு

சமுதாயம்சார் சீர்திருத்த திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை. |
| கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |

## 3.2 கணக்காய்வு ஐய வினாக்களுக்கு பதிலளித்தல்

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த 05 கணக்காய்வு ஐய வினாக்களுக்காக 2017 யூலை 31 ஆந் திகதி வரை பதில்கள் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன். அக்கணக்காய்வு ஐயவினாக்களுக்குரிய கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 13,616,260 ஆக இருந்தது.

## 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 3.3.1 பாதீட்டு முரண்கள்

03 சமுதாய சீர்திருத்த நிலையங்களை நிர்மாணிப்பதற்கான மூலதனச் செலவின விடயங்களுக்காக ரூபா 3,000,000 நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் உரிய திட்டமொன்று காணப்படாததால் நிதிஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தன.

## 3.4 கட்டுநிதி

நிதிப் பிரமாணம் 371 இன் பிரகாரம் செயற்பாடு முடிவடைந்தவுடன் 10 நாட்களுக்குள் பெற்றுக்கொண்ட செயல் நிமித்த கட்டுநிதிகள் தீர்வுசெய்யப்பட வேண்டிய போதிலும் 52 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 502,686 கூட்டுத்தொகையான செயல் நிமித்த கட்டுநிதி செயற்பாடு முடிவடைந்து 1 மாதம் முதல் 06 மாதங்களுக்கு இடைப்பட்ட காலதாமதத்தின் பின்னர் தீர்வுசெய்யப்பட்டிருந்தன. மேலும் ஒரு முற்பணத்தை தீர்வுசெய்வதற்கு முன்னர் 14 சந்தர்ப்பங்களில் ரூபா 180,873 கூட்டுத்தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

32601 ஆம் இலக்க அரசாங்க ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 342,364 ஆக இருந்ததுடன், அந்த நிலுவை மீதிகள் 1 ஆண்டு முதல் 5 ஆண்டுகள் வரையான காலவீச்சிலிருந்து நிலவி வந்தன. இந்நிலுவை மீதிகளை அறவிடுவதின் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ஆ) வருடாந்த விழாவொன்றிற்காக ரூபா 10,000 ஆன விழா முற்பணம் 08 மாதங்களுக்குள் அறவிடுவது என்ற அடிப்படையில் வழங்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட முற்பணத்தை முழுமையாக அறவிடுவதற்கு முன்னர் 23 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 230,000 கூட்டுத்தொகையான விழா முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன.

### 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

-------------------------------------------------------------------

### 3.6.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்

-----------------------------------------------------------

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த கொள்வனவுத் திட்டத்திற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. கொள்வனவுத் திட்டத்திற்கு உள்ளடக்கப்படாதிருந்த 105 எதிர்ப்பு வைரஸ் மென்பொருள் மற்றும் 54 யூபிஎஸ் என்பன ரூபா 452,928 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

### 3.6.2 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------------

நிதிப் பிரமாணம் 133 உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

------------------------------------------------------------------------

2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

----------------------------------------------------

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

-------------------------------------------------------------------------------------------

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2016 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அவ் அறிக்கை 2016 மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2017 ஆகஸ்ட் 20 ஆந் திகதி வரையிலும் அவ் அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.8 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | |
| (i) நிதிப் பிரமாணம் 94 | நிதிஏற்பாடு சேமிப்பினை விஞ்சி பொறுப்புகளுக்கு கடப்பாடு மேற்கொள்ளப்படக் கூடாத போதிலும் சேவைகள் அல்லது வழங்கல் அல்லாத 03 மீண்டெழும் செலவின விடயங்களில் சேமிப்பினை விஞ்சி ரூபா 518,752 ஆன பொறுப்புகளுக்காக கடப்பாடு ஏற்படுத்தப்பட்டிருந்தன. |
| (ii) நிதிப் பிரமாணம் 138 | ரூபா 114,060 கூட்டுப்பெறுமதியான 02 உறுதிச் சீட்டுக்களுக்காக செலவினம் சான்றுறுதிப் படுத்தப்படாதிருக்கையில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. |
| (ஆ) 1997 ஒக்தோபர் 14 ஆந் திகதிய 124 ஆம் இலக்க நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் சுற்றறிக்கை | பதவியொன்றில் பதில் கடமை புரியக்கூடிய உயர்கால எல்லை 03 மாதங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும், 14 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக சமுதாய சீர்திருத்த ஆணையாளர் பதவியில் பதில் கடமைக்காக இரண்டு உத்தியோகத்தர்கள் 02 சந்தர்ப்பங்களில் நியமிக்கப்பட்டிருந்தனர். |

| | | |
|---|---|---|
| (இ) | 2016 திசெம்பர் 09 ஆந் திகதி 252/2016 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | நிதிச் செயலாற்றல் கூற்று, நிதி நிலைமைக் கூற்று, மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் அட்டுறு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட கணக்குகள் தொகுதி 2017 யூன் 30 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---

**அரச பெறுகை வழிகாட்டல் செயற்பாடுகளிலிருந்து விலகுதல்**

---

திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுகைகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டின் போதும் மீளாய்வாண்டிலும் மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 13,746,763 கூட்டுப்பெறுமதியான 08 பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.4 இல் குறிப்பிடப்பட்டுள்ள விலை ஒப்பிட்டு முறைமையின் பிரகாரம் 03 கூறுவிலைகள் பெற்றுக்கொள்ளப்பட்டு குறைந்த விலை பெற்றுக்கொண்டதாக கூறுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருந்தது. கூறுவிலை கோரல் கடிதங்கள் அனுப்பியதாகவும், கூறுவிலையுடன் கடிதங்கள் கிடைத்த முறை மற்றும் விலைகளை திறக்கும் குழுவொன்றின் முன்னால் திறக்கப்பட்டதாகவும் தொழில்நுட்ப மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு பெறுகைக் குழுவின் அங்கீகாரத்தை பெற்றுக்கொண்டதை உறுதிப்படுத்துவதற்கு எவ்வித எழுத்து மூல சான்றுகளும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே பொருட்களையோ சேவைகளையோ பெற்றுக்கொள்வதற்காக தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் தவிர விலை விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டு எஞ்சிய வழங்குனர்களின் முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் போலியானதெனவும் சில கூறுவிலைகள் ஒரே கேள்விதாரரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை பரிசோதனைகளின் போது உறுதிப்படுத்தப்பட்டது.

(ஆ) அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.6 வழிகாட்டலின் பிரகாரம், ஆரம்ப ஒப்பந்த பெறுமதியில் 50 சதவீதத்தை மிகைத்து மீண்டும் கட்டளையிடக் கூடாத போதிலும், ரூபா 600,932 கிரயத்திலான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த வழங்குனரிடமிருந்து மீண்டும் கட்டளையிடப்பட்டு ரூபா 512,038 கிரயத்திலான அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

**3.10 செயலாற்றல்**

---------------------

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

---------------------------------------------------------------------------------------------

திணைக்களத்தினால் சமுதாய சீர்திருத்த செயற்பாடுகளை பலப்படுத்துவதற்காக நீதிவான் நீதிமன்ற முறைமையினுள் இருக்கும் நீதிவான்கள், சட்டத்தரணிகள், அரச உத்தியோகத்தர்களை அறிவூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்தப்படவேண்டும். எனினும், அதற்காக திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. சமுதாய சீர்திருத்த காரியாலயத்துடன் கூடிய 100 நீதவான் நீதிமன்றங்களில் 10 இல் இருக்கும் மேற்குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் மீளாய்வாண்டின்போது அறிவூட்டும் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருந்தன. மேலும், 100 சமுதாய சீர்திருத்த அலுவலகங்களில் 39 அலுவலகங்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது மேற்பார்வை செய்யப்பட்டிருந்ததுடன் அச்செயற்பாடும் திட்டமொன்று இல்லாமல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.11 தீர்வுசெய்யப்படாத கணக்காய்வு பந்திகள்**

---------------------------------------------------------------------------------

திணைக்களத்திற்குரிய முன்னைய ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வுப் பந்திகளில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட குறைகள் தொடர்பாக திணைக்களத்தினால் சீர் செய்யப்படாத பந்திகளுடனான தொடர்பு கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கைகளுடனான தொடர்பு | | தொடர்புடைய விடயம் |
|---|---|---|
| ஆண்டு | பந்தி இலக்கம் | |
| 2015 | 3.5(அ) | கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல் |

## 3.12 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வேலை பரிசோதகர்களை பயிற்றுவிப்பதற்கு செயற்படுத்தப்பட்ட சமுதாய சீர்திருத்த டிப்ளோமாவிற்காக 04 தலைமை அலுவலக எழுதுனர்களுக்காக ரூபா 91,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆணையாளரால் பயன்படுத்தப்பட்டிருந்த டயலொக் டீ.வீ இணைப்பு அப்பதவி வெற்றிடமாகியதன் பின்னர் துண்டிக்கப்படாமையால் மீளாய்வாண்டின்போது அதற்காக ரூபா 10,858 தொகை செலவிடப்பட்டிருந்தது.

## 3.13 மனித வளங்கள் முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறுள்ளது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 04 | 03 | 01 |
| (ii) | மூன்றாம் நிலை | 124 | 109 | 15 |
| (iii) | இரண்டாம் நிலை | 468 | 387 | 81 |
| (iv) | ஆரம்ப நிலை | 11 | 08 | 03 |
| | மொத்தம் | 607 | 507 | 100 |